**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 20**

**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

---

**நாள் : 12.10.2022 - புதன்கிழமை (முற்பகல் 11.00 மணி)**

**இடம்: உசைனுதீன் குளிர்மை அரங்கு**

---

## வரலாற்று உணர்வு மாணவர்களுக்கு மிகவும் அவசியம்
## கவிஞர் நந்தலாலா உரை

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறையில் **சிற்பி பாலசுப்ரமணியம் அறக்கட்டளைச் சொற்பொழிவு** 12.10.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கவிஞர் நந்தலாலா அவர்கள் வரலாற்றுத் தரவுகளும் நூலாக்கமும் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். நாம் வாழ்கின்ற ஊர் பற்றிய சுவாரஸ்யமான நனவோடையே வரலாற்று நூல்கள் தோன்றுவதற்கு அடிப்படையாகும். வரலாற்று ஆவணங்களை விட சொந்த ஊர் பற்றிய நம் பதிவுகள் மிகவும் வலிமையானவையாகும். திருச்சி மாநகரம் கல்வியில் சிறந்த மாநகரமாக மட்டும் இல்லை சமய நல்லிணக்கத்திற்கும் மிகவும் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது எனக் கவிஞர் நந்தலாலா தம் சிறப்புரையில் குறிப்பிட்டார். முன்னதாகத் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திரு.து.பிரபாகரன் அவர்கள் **கவிஞர் நந்தலாலா எழுதிய ‘ஊரும் வரலாறு’ நூலை அறிமுகம் செய்தார்.**

நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமை ஏற்றார். கல்லூரி நிருவாகக்குழு செயலாளர் டாக்டர் அ.கா.காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது, உதவிச் செயலர் முனைவர் க.அப்துஸ் ஸமது, துணை முதல்வா் அ.முகம்மது இப்ராஹீம், தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் தேர்வு நெறியாளர் முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு வரவேற்புரை நிகழ்த்தினார். முதுகலை மாணவர் திரு. பி.லீ.தயாநிதி நன்றி நவின்றார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திரு. செ.சுகவனேஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறை மற்றும் வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் பெருந்திரளாக நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

---


ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
( பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது )
திருச்சிராப்பள்ளி – 620 020.


ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
( பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது )
திருச்சிராப்பள்ளி – 620 020.
முதுகலைத் தமிழாய்வுத்துறை
அறக்கட்டளைச் சொற்பொழிவு
நாள் :

